# அண்ணலைப் போற்றிய கழகம்!

**நீரை.மகேந்திரன்**




“டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு வீட்டுக்கு வீடு கொண்டு செல்லப்பட வேண்டும். அம்பேத்கர் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் உரியவர் அல்ல. எல்லா மக்களுக்கும் அவரைப் பாராட்ட உரிமை இருக்கிறது”.

1958-ஆம் ஆண்டு, அண்ணல் அம்பேத்கர் சிலை அமைப்பதற்காக சென்னை ஒற்றைவாடை திரையரங்கில் நடைபெற்ற நாடகத்தில், தலைமை வகித்த அண்ணா ஆற்றிய உரை இது.

அதுமட்டுமல்ல சென்னையில் அண்ணல் அம்பேத்கருக்கு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும் என்றும் அப்போது குறிப்பிட்டவர் பேரறிஞர் அண்ணா.

இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களிடம் அண்ணல் அம்பேத்கர் குறித்த மிக அறிவார்ந்த சித்திரத்தை உருவாக்கியதில், கழகத்தின் பங்கு முக்கியமானது. 1958-ஆம் ஆண்டில் அண்ணாவின் அந்த உரை அதன் ஒரு சிறு சான்று.

ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களுக்கான தலைவராக மட்டுமல்ல அனைத்து மக்களுக்கான தலைவராகவும் அண்ணல் அம்பேத்கர் கொண்டு செல்லப்பட வேண்டும் என ஈடுபட்ட இயக்கம் தி.மு.க.

## பெரியாரும் அம்பேத்கரும்

தமிழ்நாட்டின் சமூக நீதி சமத்துவ வரலாற்றில் பெரியாரைப் பற்றிப் பேசுவது போல், இந்தியாவின் சமூக நீதி வரலாற்றில் அண்ணல் அம்பேத்கரின் பங்கினை உயர்த்திப் பிடித்தது, திராவிட இயக்கம்தான். அம்பேத்கரின் பணியை 1929-ஆம் ஆண்டிலேயே பதிவு செய்கிறார் பெரியார்.

‘பம்பாயில் சுயமரியாதை முழக்கம்’ என மத்திய மாகாணங்கள் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய உரையைக் ‘குடிஅரசு’ இதழ் பதிவு செய்கிறது.

கருத்தியல் ரீதியாக பெரியாரும் அம்பேத்கரும் கொண்டிருந்த இந்த ஓர்மை சாதி ஒழிப்புக்கும், சனாதன தர்மத்துக்கு எதிராகவும் சமரசமற்ற போராட்டத்தைக் கொண்டிருந்தன. அம்பேத்கர் சாதி ஒழிப்பு என்கிற தனது ஆவணத்தைப் பெரியாருக்கு அனுப்பி பெரியார் அதை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுகிறார். அம்பேத்கரை அறிவார்ந்த தளத்தில் கொண்டு சென்றதில் பெரியாரின் பங்கு கணிசமானது. இதற்குப் பின் அந்தப் பொறுப்பை, தி.மு கழகம் ஏற்றது.

## அண்ணாவும் அம்பேத்கரும்

1956-ஆம் ஆண்டு, அம்பேத்கர் பௌத்தம் தழுவிய போது, அதை வரவேற்றுப் பாராட்டியும் புகழ்ந்தும் ‘திராவிட நாடு’ இதழில் விரிவான கட்டுரை எழுதுகிறார் அண்ணா. அம்பேத்கரின் மதமாற்றம் குறித்து தமிழ்நாட்டில் இருந்து வெளியான விரிவான எதிர்வினை அண்ணாவுடையது என இதைப் பதிவு செய்கிறார் எழுத்தாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார்.

“தீண்டாமை, பாராமை, நெருங்காமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு போன்ற மிக மிகக் கொடிய தொற்றுநோய்க் கிருமிகள் குடியேறியுள்ள மாளிகை, தங்கத்தால் ஆக்கப்பட்ட அரண்மனையாக இருந்தாலும், அங்கு டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் நீண்ட நாள் வாழ ஒப்பமாட்டார்கள்; வெளியேறித்தான் தீருவர்” என்று அதைப் பதிவு செய்கிறார் அண்ணா.

சனாதனத்துக்கு எதிராக அண்ணல் அம்பேத்கரின் போராட்டங்களையும், அவரின் வாழ்க்கையையும் தமிழ்நாட்டில் பரவலாகக் கொண்டு செல்வதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார் அண்ணா.

“அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஒரு போர் வீரனைப் போல தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார். மிக மிக ஒடுக்கியாளப்பட்டு வந்த மக்கள், தாங்கள் ஏன் அப்படி ஒடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவும் அச்சப்பட்ட காலத்தில், தாங்கள் ஒடுக்கப்படுவதற்கு யார் காரணம் என்பதைத் தட்டிக் கேட்க திராணியில்லாமல் இருந்த காலத்தில், பயந்து வாழ்க்கை நடத்திய மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்தி உரிமை வேட்கையை உணர்த்தி, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மக்களிடையே குனிந்து குனிந்து வாழ்ந்தவர்களை நிமிரச் செய்து விழியைத் திறந்து பார்க்க அஞ்சுபவர்களுக்கு விழிப்புணர்ச்சியைத் தந்து பேசாதவர்களைப் பேச வைத்து போராடச் செய்து வந்தார் டாக்டர் அம்பேத்கர்” என்று 1958-இல், சென்னை சேத்துப்பட்டில் அம்பேத்கர் நினைவு மன்றத்தில் இந்த உரையை ஆற்றுகிறார் அண்ணா.

> **பெரியாரைப்போல் அம்பேத்கரும் இங்கே விதைக்கப்பட்டதால்தான் தமிழ்நாடு இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது.**

## கலைஞரும் அம்பேத்கரும்

கழகத்தின் ஆட்சிக்குப் பின்னர், அம்பேத்கரை தமிழ்நாடு எங்கும் விதைக்கும் பணியைக் கையில் எடுக்கிறார் கலைஞர். 1972-ஆம் ஆண்டு, அம்பேத்கர் பெயரில் கல்லூரி, மும்பை மராத்வாடா பல்கலைக்கழகத் துக்குப் பெயரைச் சூட்டுவதற்கான தந்தி அனுப்பும் போராட்டம், அம்பேத்கர் நூற்றாண்டு விழா என அம்பேத்கரின் புகழைக் கொண்டு சேர்ப்பதில் சளைக்காமல் நின்றவர் கலைஞர்.

மராத்வாடா தந்தி அனுப்பும் போராட்டம் மிகப்பெரிய மக்கள் இயக்கமாகத் தமிழ்நாட்டில் நடைபெற்றது. அண்ணல் அம்பேத்கரை தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்கான தலைவராக, வட மாநிலங்களில் இன்னமும் பார்க்கப்படும் நிலையில், தமிழ்நாட்டில் நுட்பமாக அவரைப் பொதுத் தலைவராகக் கொண்டு சேர்த்ததில் மராத்வாடா தந்திப் போராட்டம் மிக முக்கியமானது.

‘அண்ணல் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்’, ‘அம்பேத்கர் நினைவு மண்டபம்’ எனத் தொடர்ச்சியாகப் போற்றியும் புகழ்ந்தும் அண்ணலின் வரலாற்றை, தமிழ்நாடு எங்கும் சேர்த்த இயக்கமாக தி.மு.கழகம் இருந்துள்ளது.

பெரியார், அண்ணா, கலைஞர் மட்டுமல்ல அவர்கள் வழியில் தொடரும் ‘திராவிட மாடல்’ அரசும் அம்பேத்கரின் சிந்தனைகளை அடுத்தத் தலைமுறைக்கு நகர்த்துகிறது. அம்பேத்கர் மணி மண்டபத்தில் சிலை நிறுவியது மட்டுமல்ல, அவர் பிறந்த நாளான ஏப்ரல் 14, தமிழ்நாட்டில் சமத்துவ நாளாக கொண்டாடப்படும் என அறிவித்தார் முதலமைச்சர். அம்பேத்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை மொழிபெயர்த்து தமிழ்நாடு அரசு செம்பதிப்பாக வெளியிடவும் உள்ளது.

சாதி சமய ஏற்றத்தாழ்வுகள், சமூகக் கொடுமைகள், சனாதன கொடூரங்களுக்கு எதிராக சமூகநீதி சமத்துவம் பேசிய மக்கள் இயக்கம் , அம்பேத்கரைக் கொண்டாடியதில், உயர்த்திப் பிடித்ததில் வியப்பில்லை.

பெரியாரைப்போல் அம்பேத்கரும் இங்கே விதைக்கப்பட்டதால்தான் தமிழ்நாடு இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது.

---

## திராவிட இயக்க இதழ்கள் - கவிக்கொண்டல்




திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி தளகர்த்தர்களில் ஒருவர் மா.செங்குட்டுவன். திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்காரவாசல்காரர். திராவிட மாணவர் கழகச் செயலாளராகப் பணியாற்றினார். இவரது இயற்பெயர் நடராசன். தமிழ் உணர்வின் காரணமாக செங்குட்டுவன் என்று மாற்றிக் கொண்டார். தி.மு.க. தொடங்குவதற்கான அமைப்புக் கூட்டம் 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் நடைபெற்றது. அதில் பங்கேற்ற 150 பேரில் இவரும் ஒருவர்.

1979 -ஆம் ஆண்டு மே மாதம் ‘கவிக்கொண்டல்’ என்னும் மரபுக் கவிதைக்கான மாத இதழைத் தொடங்கினார். அவ்விதழ் 1983-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை வெளிவந்தது. பின்னர் 1991-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ‘மீண்டும் கவிக்கொண்டல்’ என்னும் அவ்விதழைத் தொடங்கினார். 2020- ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இந்த இதழ் வெளிவந்தது. அடுத்த ஆண்டு அவர் காலமாகிவிட்டார்.

‘சென்னை மாநகராட்சி’, ‘வேட்பாளர்’ உள்ளிட்ட பல தமிழ்ச் சொற்களைத் தனது இதழ்ப் பணி மூலம் நடைமுறைப் புழக்கத்துக்குக் கொண்டு வந்தவர் இவர்தான்.

“கவிகொண்டல் இதழில் ‘வெண்பா விருந்து’ மூலம் எண்ணற்ற எழுத்தாளர்களை இலக்கண வரம்புக்கு உட்பட்ட கவிஞர்களை உருவாக்கியவர். ஒரு கவிஞர் ‘கவிக்கொண்டலில்’ எழுதினால் ‘மரபுவழிப் பாவலர்’ என்ற பெருமையைப் பெறும் பல்கலைக் கழகமாகக் ‘கவிகொண்டல்’ இதழ் உள்ளது” என்று ‘கவிமுரசு’ வா.மு.சே.திருவள்ளுவர் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## கொடியேற்றி பிரச்சாரம்!



வெற்றிவேலன்

எனது தந்தை கோ.மணி முன்னாள் பகுதிப் பிரதிநிதியாகப் பொறுப்பு வகித்து, கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றுச் சிறை சென்றிருக்கிறார். 1984 -ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, சென்னை சேத்துப்பட்டுப் பகுதிக்கு தலைவர் கலைஞரை அழைத்துக் கொடி ஏற்றித் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது ஈழப் பிரச்சினை நடந்து கொண்டிருந்த காரணத்தால் தலைவர் கலைஞர் அது குறித்து உரையாற்றினார். வை.கோ அவர்களும் உடன் வந்திருந்தார். சக கழகத் தோழர்களுடன் என் தந்தை கோ.மணி அவர்கள் தலைவர் கலைஞருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-ம.வெற்றிவேலன், துணை ஒருங்கிணைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி, சென்னை கிழக்கு மாவட்டம்.**

## ஃப்ளாஷ்பேக்



இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம் மாற்றங்கள்!

**1958-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னை லிங்கு செட்டி தெருவில் மறைமலை அடிகள் நூலகம் திறக்கப்பட்டது. கூட்டத்தில், பேரறிஞர் அண்ணா உரையாற்றினார். பேச்சில் தமிழர்கள் முக்கியமாக இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். குறிப்பாக, படித்த சிலவற்றை மறக்க வேண்டி இருப்பதும், படிக்க மறந்த பலவற்றைப் படிக்க வேண்டியதும் அவசியம் என்றார். முன்பு கலங்கரை விளக்கத்துக்கு ‘தீபஸ்தம்பம்’ என்பார்கள். இப்போது அதைத் கலங்கரை விளக்கம் என தமிழ்ப் படுத்தியுள்ளோம். இது போன்று தமிழ்நாட்டில் பெரியதொரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்றார்.**

## சரிந்து வருகிறது செல்வாக்கு!

அரசியல் சாசனப்படி மக்களிடையே விரோதத்தை ஏற்படுத்தும் வகையில் பேசக்கூடாது என்பதே விதி, என்று மாநில அமைச்சர் உதயநிதிக்கு மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுரை கூறியிருக்கிறார்.

அரசியல் சாசனம் வேறு...

சனாதன தர்மம் வேறு...

அமைச்சர் உதயநிதி பேசியது சனாதன தர்மத்துக்கு எதிரான கருத்துகளைத் தான்.

அது அரசியல் சாசனத்துக்கு எதிரான கருத்துகள் அல்ல...

ஆனால், அரசியல் சாசன சட்டத்துக்குச் சற்றும் சம்பந்தமில்லாத சனாதன தர்மத்தை அரசியல் சாசன சட்டத்தின்படி பதவியேற்றுள்ளவர்கள் தூக்கிப் பிடித்துப் பிரசங்கம் செய்வது சட்டப்படி தவறு.

பிரதமரும் ஒன்றிய அமைச்சர்களும் அரசியல் சாசன சட்டத்தை மறந்து சனாதன தர்மத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார்கள்..

இந்திய அரசியல் சாசன சட்டத்துக்கு எந்த வகையிலும் ஈடாகாது சனாதன தர்மம். எல்லோரும் ஒன்று என்பது அரசியல் சாசன சட்டம். எல்லோரும் ஒன்று என்பதை ஏற்க மறுப்பது சனாதன தர்மம்...

சனாதன தர்மத்தை எதிர்ப்பது, சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை அல்ல. இன்னும் சொல்லப்போனால் அரசியல் சாசன சட்டத்தை மேலும் பலப்படுத்தக்கூடிய நடவடிக்கை அது.

சனாதன தர்மத்தை தமிழ்நாட்டில் திடீரென்று அமைச்சர் உதயநிதி மட்டும் எதிர்க்கவில்லை, விமர்சிக்கவில்லை.. ஆண்டு ஆண்டு காலமாகப் பல தலைவர்கள் சனாதன தர்மத்தைக் கடுமையாகச் சாடி உள்ளார்கள்..

இன்று வட இந்தியாவில் சரிந்து வரும் தங்கள் செல்வாக்கை சரிகட்டுவதற்காக பா.ஜ.க.வினர் இந்த விவகாரத்தைத் திரித்துப் பேசி வருகிறார்கள்


சனாதன தர்மத்துக்கு எதிராகப் பெரும் கூட்டத்தை நடத்தி, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா உறுதிமொழி ஏற்றிருக்கிறார்.

ஆயிரக்கணக்கானோர் இந்த உறுதி மொழியை ஏற்றுள்ளனர். குஜராத்தில்கூட ஒரு இந்து அமைப்பு சனாதன தர்மத்தை மாற்றி அமைக்க வேண்டும். காலத்திற்கேற்ப புதிய மனுதர்மத்தை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களையும் இந்து அமைப்பினர்களையும் ஒருசேர வரவழைத்து, அந்த மாநில அரசு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. ஆயிரம் ஆண்டுகள் பழமையான சனாதன தர்மம் இந்த 21-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றது அல்ல.

**-பத்திரிகையாளர் லோகநாதன் தங்கசாமி முகநூல் பதிவு.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 245




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131